**செய்தி வெளியீடு**

**செய்தி வெளியீடு எண்.10/2025** **நாள் : 07.02.2025**

**<u>சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் பணியாளர்களின் நலனுக்கான சிறப்பு மருத்துவ முகாம் நடைப்பெற்றது</u>**

**<u>சென்னை குடிநீர் வாரியம் தகவல்</u>**

ரோட்டரி கிளப் ஆஃப் அண்ணா நகர் மெட்ராஸ், அப்பல்லோ சிறப்பு மருத்துவமனைகள், வானகரம் மற்றும் மாதவ் நீரிழிவு மையம், அண்ணா நகர் இணைந்து, சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் பணியாளர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக உடல் நலம் மற்றும் ஆரோக்கிய சிறப்பு மருத்துவ முகாம் இன்று ( 07.02.2025) நடைப்பெற்றது. இம்முகாமில், இருதய நோய், சர்க்கரை நோய், மகளிர் மருத்துவ பரிசோதனைகள் நடைப்பெற்றது. மேலும், எலும்பியல் துறைகளில் சிறப்பு ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

இம்முகாமில், ரோட்டரி கிளப் ஆஃப் அண்ணாநகர் மெட்ராஸ் தலைவர் அரவிந்தன் ஸ்ரீராமுலு, தலைமை விருந்தினர் Rtn. என்.எஸ். சரவணன், ஆளுநர், ரோட்டரி மாவட்டம் 3234, ரோட்டரி சங்கங்கள் மூலம் தொடங்கப்பட்ட பல்வேறு சமூக நலத் திட்டங்களை எடுத்துரைத்தனர். சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர். டி.ஜி. வினய், இ.ஆ.ப., கௌரவ விருந்தினராக சிறப்பித்து ஒவ்வொரு பணியாளரின் நல்வாழ்வின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார், டாக்டர்.ஹரிகிருஷ்ணன் பார்த்தசாரதி – மூத்த இருதய நோய் நிபுணர் & TAVI ஸ்பெஷலிஸ்ட் அப்பல்லோ சிறப்பு மருத்துவமனை வானகரம், இதுபோன்ற முகாம்களின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தினார். மாதவ் நீரிழிவு மையத்தின் CEO Rtn. விருந்தா தீபக், நீரிழிவு நோய் கட்டுப்பாட்டின் அவசரத் தேவையை தெளிவாக விளக்கினார்.

...2...

இந்நிகழ்வில், சென்னை குடிநீர் வாரிய பொறியியல் இயக்குநர் திரு.இரா.சிவமுருகன், சென்னை குடிநீர் வாரிய மேற்பார்வை பொறியாளர்கள் மற்றும் சென்னை அண்ணா நகர் ரோட்டரி சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater cmwssb.tn.gov.in